(2023) 3 எஸ்.சி.ஆர். 390

தமிழ்நாடு அரசு மற்றும் ஒருவர் முதலானோர்

–எதிர்–

தமிழ்நாடு மக்கள் நலத் திட்டப் பணியாளர்கள்

மற்றும் பலர் முதலானோர்

உரிமையியல் மேல்முறையீடு எண்(கள்) 10563–10569/2017

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. அஜய் ரஸ்தோகி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திருமதி. பேலா எம். திரிவேதி

பணிச் சட்டம் – பணியிடங்கள் உருவாக்குவதற்கான கட்டளை – அனுமதிக்காமை குறித்து – பணியிடங்களை உருவாக்குவதற்கு உயர் நீதிமன்றம் கட்டளை பிறப்பிக்க முடியாது – தற்போதைய வழக்கில், எதிர்மேல்முறையீட்டாளர்கள், அரசு வேலையிலோ அல்லது குடிமைப் பணியிலோ இருப்பவர்கள் அல்லர், மேலும் அவர்கள், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சரத்து 309 இன் வரம்புரையின் கீழ் இயற்றப்பட்டுள்ள சட்ட விதிகளால் கட்டுப்படுத்தப்படுகின்ற/முறைப்படுத்தப்படுகின்ற பணி நிபந்தனைகளைக் கொண்ட அரசுப் பணியாளர் பணித்துறை எதிலும் உள்ள பணியிடத்திலும் நியமனம் செய்யப்படவில்லை – ஒப்புதலளிக்கப்பட்ட பணியிடம் இல்லாதநிலையில், பணியிடத்தை உருவாக்கி, மாநில அரசுப் பணியில் தொடர்ந்திருப்பவர்களை உள்ளீர்த்துக்கொள்வதற்கு மாநில அரசை வற்புறுத்த முடியாது – ஆகவே,

பணியிடங்களை உருவாக்கி, எதிர்மேல்முறையீட்டாளர்களை அவர்களது தகுதியின் அடிப்படையில் உள்ளீர்த்து மீண்டும் பணியிலமர்த்தும் உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான கட்டளை சட்டப்படி நிலைநிறுத்தத்தக்கதல்ல – எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது – மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம், 2005 – இந்திய அரசமைப்புச் சட்டம் – சரத்து 309.

மேல்முறையீடுகளை அனுமதித்த உயர் நீதிமன்றம் தீர்மானித்ததாவது :

1.1. அறிவார்ந்த் தனியமர் நீதியரசர் அவர்களும், கூட்டமர்வும் தங்களது எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரைகளில், 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணையைப் பிறப்பித்து இடைநிறுத்தப்பட்ட அந்தப் பணியாளர்கள், மீண்டும் பணியமர்த்தப்படுவதற்கு உரியவர்கள் மட்டுமின்றி, பணியிடத்தை உருவாக்கிய பிறகு பணியில் முறைப்படுத்தப்படுவதற்கு உரியவர்கள் என்ற காண்முடிவுடன் இணங்கினர். எங்களுடைய கருத்துப்படி, உயர் நீதிமன்ற கூட்டமர்வால் என்ன கருத்துரைக்கப்பட்டுள்ளதோ, அது சட்டப்படி நிலைநிறுத்தத்தக்கதல்ல. எதிர்மேல்முறையீட்டாளர்கள், அரசு வேலையிலோ அல்லது குடிமைப் பணியிலோ இருப்பவர்கள் அல்லர், மேலும், அவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 309 க்கான வரம்புரையின் கீழ் இயற்றப்பட்டுள்ள சட்ட விதிகளால் கட்டுப்படுத்தப்படுகின்ற/ முறைப்படுத்தப்படுகின்ற பணி நிபந்தனைகளைக் கொண்ட அரசுப் பணியாளர் பணித்துறை எதிலும் உள்ள பணியிடத்திலும் நியமனம் செய்யப்படவில்லை. உள்ளபடியாக, எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஒரு திட்டத்தின் பணியில் ஈடுபட்டுவந்தனர், அதற்கான மதிப்பூதியமும் செலுத்தப்பட்டு வந்தது, மேலும், சட்டம் 2005 இன் கட்டளைப்படி

தமிழ்நாடு மாநிலத்தில் திட்டம் தொடர்ந்திருக்கும் வரையில், அவர்கள் பணியில் தக்கவைத்துக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவர்கள் என அறியப்பட்டாலன்றி அல்லது பணிமூப்பு ஓய்வு வயதை அடைந்துவிட்டாலன்றி, சட்டம் 2005 இன் நோக்கத்தை நிறைவேற்றுவதில் அரசால் நிறைவேற்றப்பட்ட உரிய திட்டங்களின் கீழ் பணிபுரிந்துவரும் அந்த நபர்களை இடைநிறுத்துவதற்கான காரணங்கள் எதுவுமில்லை என்பதை நாங்களும் நியாயமெனக் காண்கிறோம். (பத்திகள் 46, 49 மற்றும் 50)

1.2. ஆனால், 8 நவம்பர் 2011 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணை நிலைநிறுத்தத்தக்கதல்ல என உத்தரவிடப்பட்டால், எதிர்மேல்முறையீட்டாளர்களும், இவர்களைப்போன்று நியமனம் செய்யப்பட்ட மற்றவர்களும் 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணை பிறப்பிப்பதற்கு முன்பாக பணியமர்த்தப்பட்டது போன்று, அதே வரையறைகளின் அடிப்படையில் அவர்களை மீண்டும் பணியமர்த்திக் கொள்ளப்பட முடியும் என்ற காரணத்தால், ஏற்கெனவே கருத்துரைக்கப்பட்டவாறு, அந்தப் பணியாளர்கள் மீண்டும் பணியமர்த்தப்படுவதற்கும் பணி முறைப்படுத்துதலுக்கும் தகுதியானவர்கள் அல்லர் என்பதாகும். அதாவது, அவர்களின் பணியமர்த்தம் 1 ஜூன் 2010 முதல் 31 மே 2012 வரையில் அமலில் இருக்குமாறு 21 மே 2010 ஆம் தேதியிடப்பட்ட ஆணை மூலம் இரண்டாண்டு காலம் நீட்டிக்கப்பட்டுள்ளதால், அந்த நபர்கள் 31 மே 2012 வரையில் மட்டுமே பணியைத் தொடர அனுமதிக்கப்பட்டிருக்க முடியும். மேற்கொண்டு நீட்டிப்பு ஏதும் வழங்கப்படாத நிலையில் இத்திட்டத்தின் கீழ் இதற்குப்பிறகு மேற்கொண்டு பணியில் தொடருவதற்கு, பணியமர்த்தப்பட்ட நபரில்

எவருக்கும் சாதகமான உரிமை ஏதும் அளிக்கப்படவில்லை. அதே சமயத்தில், ஒப்புதலளிக்கப்பட்ட பணியிடம் இல்லாவிட்டால், அப்பணியிடத்தை உருவாக்கவும், மாநில அரசில் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்ற நபர்களை உள்ளீர்த்துக் கொள்ளவும் மாநில அரசை வற்புறுத்த முடியாது. பணியிடங்களை உருவாக்கி, எதிர்மேல்முறையீட்டாளர்களின் தகுதியின் அடிப்படையில் அவர்களை உள்ளீர்த்துக்கொண்டு மீண்டும் பணியிலமர்த்தும் உயர் நீதிமன்றத்தின் கட்டளை சட்டப்படி நிலைநிறுத்தத்தக்கதல்ல என்பதும், அது முற்றிலும் தள்ளுபடி செய்யப்படுவதற்குரியதாகும். (பத்திகள் 51, 54 மற்றும் 57)

1.3. மாநில அரசால் அதன் 7 ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்ட தற்போதைய கொள்கையின் கீழ் மீண்டும் பணியமர்த்தப்பட்டிருக்காத அந்த நபர்கள் 1 டிசம்பர் 2011 லிருந்து 31 மே 2012 வரையிலான காலத்திற்கு தங்களின் மதிப்பூதியத்தைப் பெறுவதற்குரியவர்களாவர் என்ற விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது, அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட 7 ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்ட திட்டத்தைத் தொடர்ந்து அதில் சேராத அந்தப் பணியாளர்கள் தங்களின் 6 மாத காலத்திற்கான மதிப்பூதியத்தை எப்போது வேண்டுமென்றாலும் ஏற்றுக்கொள்வதற்கு உரிமையுடையவராவர் என்றாலும், முன்னதாக அரசு அவர்களுக்கு ஏற்கெனவே மதிப்பூதியம் வழங்கியுள்ளதால் அவர்கள் மேற்படி அசல் தொகைக்கு வட்டி ஏதும் பெறுவதற்குரியவர்களல்லர் என்பதை நாங்கள் தெளிவாக்குகிறோம். ம.ந.ப.இன் மதிப்பூதியத்தின்படியாக அச்சமயத்தில் நிருணயிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.25,851/– (1 டிசம்பர் 2011 முதல் 31 மே 2012 வரை) என்பதாகும். விண்ணப்பம் ஒன்று தாக்கல் செய்யப்படுகிறதென்றால், மாநில அரசு தனிநபரின் வங்கிக் கணக்கிலாவது பணத்தைச்

செலுத்தலாம். சட்டம், 2005 இன் நோக்கத்தை நிறைவேற்றும்வகையில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட 7 ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்ட திட்டத்திற்கிணங்க அதில் சேர்ந்துள்ள அந்த நபர்கள் திட்டத்துடன் ஒருங்கிணைந்திருப்பதோடு, அத்திட்டம் நடைமுறையிலுள்ளவரையில் அதில் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்பட வேண்டும். அதே சமயத்தில், 7 ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்ட திட்டத்திற்கிணங்க அதில் சேராத அந்த நபர்கள், இடைப்பட்ட காலமான 1 டிசம்பர் 2011 முதல் 31 மே 2012 வரையிலான 6 மாத காலத்திற்கான தங்களின் பணக்கொடுப்புகள் ம.ந.ப.க்கு அசல் தொகையாக வழங்கப்படும் ரூ.25,851/–ஐ ஏற்பதற்கு உரிமையானவர்களாவர். அத்தகைய விண்ணப்பம் தாக்கல் செய்யப்படுவதன்பேரில், மேல்முறையீட்டாளர்கள் மூன்று மாதங்களுக்குள் அவற்றை உரியமுறையில் சரிபார்த்தபின், ஆர்.டி.ஜி.எஸ். மூலமாக அல்லது வேறேதேனும் முறையில் அந்த ம.ந.ப.க்கு பணத்தை அனுப்பிக்கொடுக்க வேண்டும். இதன் விளைவாக, மேல்முறையீடுகள் வெற்றியடைவதால் அனுமதிக்கப்படுகின்றன. எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மேற்கூறப்பட்ட கருத்துரையுடன் நீக்கறவு செய்யப்படுகிறது. (பத்திகள் 59, 60 மற்றும் 62)

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்:</u>

மாலதி தாஸ் (ஓய்வு) தற்போது பீ.பி. மகிஷி மற்றும் பலர் –எதிர்– சுரேஷ் மற்றும் பலர், 2014 (13) எஸ்.சி.சி. 249 : (2014)3 எஸ்சிஆர் 637 – குறிப்பிடத்தக்கது.

நிகல் சிங் மற்றும் பலர் –எதிர்– பஞ்சாப் மாநில அரசு மற்றும் பலர், 2013 (14) எஸ்.சி.சி. 65: (2013) 14 எஸ்சிசி 65 : (2013) 11 எஸ்சிஆர் 1. (பொருந்தத்தக்கதல்ல)

டிவிஷனல் மேனேஜர் ஆரவல்லி கோல்ப் கிளப் மற்றும் ஒருவர் –எதிர்– சந்தர் ஹாஸ் மற்றும் ஒருவர், 2008(1) எஸ்.சி.சி. 683: மகாராஷ்டிர மாநில ரோட் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் மற்றும் ஒருவர் –எதிர்– காஸ்டரைப் ராஜ்ய பரிவாகன் கர்மாச்சாரி சங்காதனா, 2009(8) எஸ்.சி.சி. 556 : (2009) 13 எஸ்சிஆர் 937– சார்வுறப்பட்டது

குஜராத் மாநில அரசு மற்றும் பலர் –எதிர்– ஆர்.ஜெ. பதான் மற்றும் பலர், 2022 (5) எஸ்.சி.சி. 394 : செயலாளர், கர்நாடக மாநில அரசு மற்றும் பலர் – எதிர்– உமாதேவி (3) மற்றும் பலர், 2006(4) எஸ்.சி.சி. 1 : (2006) 3 எஸ்சிஆர் 953 – குறித்துக்காட்டப்பட்டது

<u>தீர்ப்புரையின் குறிப்பு</u>

[2006] 3 SCR 953 குறித்துக்காட்டப்பட்டது. (பத்தி 24)

[2013] 11 SCR 1 பொருந்தாது (பாரா 24)

[2014] 3 SCR 637 குறிப்பிடத்தக்கது (பாரா 24)

[2007] 12 SCR 1084 ஐ சார்வுறப்பட்டது (பாரா 47)

[2009] 13 SCR 937 சார்வுறப்பட்டது (பாரா 48)

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 10563–10569/ 2017.

நீ.பே. எண். 18163/2013, 18048/2014, நீ.பே. எண். 696/2012, நீ.பே. எண் 11937/2012, நீ.பே. எண்.697/2012 மற்றும் நீ.பே. எண். 11936 மற்றும் 22969/2012 இல் சென்னை உயர்நீதிமன்றத்தின் 19.08.2014 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண் 10570 /2017.

<u>வழக்குரைஞர்கள்</u>

ஜெய்தீப் குப்தா, வி. கிருஷ்ணமூர்த்தி, மூத்த வழக்குரைஞர்.,
டி. குமணன், ஷேக்எஃப். கலியா, திருமதி திவ்யா சிங்,
வினோத் கண்ணா பி ... மேல்முறையீட்டாளருக்காக

பி வில்சன், மூத்த வழக்குரைஞர்.., சுரேசன் பி., தீபக் ஜோஷி, பூபேந்தர் சிங், ஜோசப் செபாஸ்டியன், ஆர். நெடுமாறன், அபூர்வ் மல்ஹோத்ரா, திருமதி சப்னா பிள்ளை, திருமதி. ஐஸ்வர்யா மிஸ்ரா, திருமதி அருணிமா திவேதி, பி.சி. சந்திரசேகர், திருமதி. பிங்கி பவார், ஆகாஸ் பதக், நரேஷ் குமார், எஸ். நந்தகுமார், திருமதி.தீபிகா நந்தகுமார், ஆனந்த் மூர்த்தி ராவ், ராஜீவ் குப்தா, முகமது.நிஜாமுதீன் பாஷா, சிவேந்திர பாண்டே, லாசபீர் அகமது, ஏ. ராஜ ராஜன், சுபம் கோத்தாரி, பிரசாந்த் பத்மநாபன், அகிலேஷ்வர் ஜா, செல்வி. காஜல் குமாரி, ராஜா சனூர் பி., கே. எஸ். செல்வன், கே. பாரி வேந்தன், திருமதி. ஹரிப்ரியா பத்மநாபன், ரகுநாத சேதுபதி பி, செல்வி பிரியா ஆர், செல்வி. இஷிதா சௌத்ரி, செல்வி. பரீக்ஷா, எஸ். சபரி பால பாண்டியன், அவினாஷ்குமார்

... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. ரஸ்தோகி:

1. மக்கள் நலப் பணியாளர்கள் (இதில் இதற்குப்பிறகு "ம.ந.ப." எனக் குறிப்படப்படும்) என அழைக்கப்படும் "கிராம அளவிலான பணியாளர்கள்" என்ற பதவியின் கீழ் அல்லது வேறேதேனும் பெயரால் பணியிடங்களை உருவாக்கவும், 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட அ.ஆ.ப. எண் 86 வெளியிடப்பட்ட நாளன்று ம.ந.ப. பெயர் வரிசைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களின், அவர்களின் சொந்த தாலுக்கா அல்லது வருவாய் மாவட்டத்தில் வயதினைக் கருத்திற்கொள்ளாமல், ஒவ்வொரு விண்ணப்பதாரரின் கல்வித்தகுதிக்கேற்ப, தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமுள்ள மாநில அரசுப் பள்ளிகள், கிராம பஞ்சாயத்துகள், நகர பஞ்சாயத்துகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், ஆட்சியர் அலுவலகம், கிராம அலுவலகங்கள் அல்லது வேறேதேனும் அரசு அலுவலகங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் பொறுப்பேற்பு நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள காலிப் பணியிடங்களில் மாநில அரசு பணியமர்த்த வேண்டும் எனவும், மேலும், ம.ந.ப.–இல் எவரேனும் ஒருவர் பணியமர்த்தப்படவில்லை என்றாலோ அல்லது தகுதியற்றவராக இருந்தாலோ மாநில அரசு, 1 டிசம்பர் 2011–லிருந்து 31 மே 2012 வரையிலான காலத்திற்கு கடைசியாகப் பெறப்பட்ட ஊதியத்தைச் செலுத்தவேண்டும் எனவும் அரசமைப்புச் சட்டத்தின் சரத்து 226 இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட கற்றறிந்த தனியமர் நீதியரசர் அவர்களின் 23 ஜனவரி 2012 ஆம் தேதியிடப்பட்ட உத்தரவு, உயர் நீதிமன்ற நீதியர் அமர்வால், அதன் அதிகாரவரம்பில் உறுதிசெய்யப்பட்டு, 19 ஆகஸ்டு 2014 ஆம் தேதியிடப்பட்டு பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை

மற்றும் உத்தரவை எதிர்த்து, தமிழ்நாடு அரசின் வேண்டுரையின்பேரில் இந்த மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2. பதிவாவணத்திலிருந்து எடுக்கப்பட்டதும், தற்போதைய நோக்கத்திற்கு தொடர்புற்றதுமான வழக்கின் சுருக்கமான சங்கதிகளாவன, தமிழ்நாடு அரசு, கிராம பஞ்சாயத்துகளிலுள்ள பல்வகையான பணிகளை வேலையில்லா இளைஞர்களிடம் ஒப்படைப்பதற்காக 10 ஆம் வகுப்பு முடித்த கிராமப்புறங்களிலுள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு 1989–1990 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், ஊரக வளர்ச்சித் துறை மூலமாக, 2 செப்டம்பர் 1989 ஆம் தேதியிடப்பட்ட ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது, இத்திட்டத்தை கிராம அளவில் செயற்படுத்தவும் மற்றும் கிராம அளவில் குறைந்தபட்சம் ஓர் ஆண் மற்றும் ஒரு பெண் என இரு வேலையாட்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் (மாநிலத்திலுள்ள ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துகளிலும் அவர்கள் பணியமர்த்தப்படுவர்) முடிவுஎடுத்தது. இவ்வாறாக, மாநிலம் முழுவதும் 25,234 தொழிலாளர்கள் மாதந்தோறும் ரூ.200/– மதிப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டு, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு தனித்தனி பொறுப்புகள் வழங்கப்பட்டன. வேலையில்லா படித்த இளைஞர்களை நியமிக்கும்போது வெளிப்படைத்தன்மையைப் பராமரிக்க கிராம ஊராட்சி அளவில் ஆண்/பெண் தொழிலாளர்களுக்கு நியமனம் செய்யப்பட வேண்டிய உள்ளூர் பகுதியில் அமல்படுத்தப்பட வேண்டிய ஓர் அமைப்பையும் அரசு ஏற்றுக்கொண்டது.

3. மாநில அரசால் 2 செப்டம்பர் 1989 ஆம் தேதியிடப்பட்ட அதன் கொள்கையின்படி அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் ஆட்கள் நியமிக்கப்பட்டனர் என ஆவணத்திலிருந்து தெளிவாகிறது. பின்னர் ம.ந.ப.ஐ கொண்ட நியமனங்கள், அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.6 கோடி கூடுதல் செலவினம் ஏற்படுத்துவதைத் தவிர, கிராம அளவிலான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எவ்விதத்திலும் உதவிகரமாக இல்லை என்ற கூற்றின்பேரில் 13 ஜூலை 1991 ஆம் தேதியிடப்பட்ட ஆணை மூலம், அரசால் திட்டம் கலைக்கப்பட்டு, வட்டார அளவில் விரிவாக்க அலுவலர்கள் மூலம் சம்பந்தப்பட்ட பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு விடப்பட்டது.

4. அதன்விளைவாக, 2 செப்டம்பர் 1989 ஆம் தேதியிடப்பட்ட அரசின் கொள்கை முடிவுகளைத் தொடர்ந்து ம.ந.ப.ஆக நியமிக்கப்பட்ட நபர்களின் பணிகள் முடிவுறுத்தப்பட்டன/நிறுத்தப்பட்டன.

5. மீண்டும், 1996–1997 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்டத்தில் 25,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்காக, ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்ட வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில், 2 செப்டம்பர் 1989 ஆம் தேதியிடப்பட்ட சுற்றறிக்கையைத் தொடர்ந்து, கிராமச் சொத்துகளையும், நூலகங்களையும் பராமரிக்க உதவிபுரிவதற்காகவும், கிராமங்களில் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கும் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் இரண்டு ம.ந.ப.–ஐ (ஆண் ஒருவரும் பெண் ஒருவரும்) மாதமொன்றுக்கு ரூ.500/– மதிப்பூதியம் வழங்கி அத்திட்டம், அரசால் 24 பிப்ரவரி 1997 ஆம் தேதியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் (இதில்

இதற்குப் பிறகு "துறை" எனக் குறிப்பிடப்படும்) அரசாணை மூலம் மீண்டும் கொண்டுவரப்பட்டது.

6. அனைத்து செயல்முறை நோக்கங்களுக்காக 2 செப்டம்பர் 1989 ஆம் தேதியிடப்பட்ட ஆணை மூலம் ஏற்கெனவே அறிமுகப்படுத்தப்பட்டதும், பின்னர் 24 பிப்ரவரி 1997 ஆம் தேதியிடப்பட்ட ஆணை மூலம் அரசால் மீண்டும் கொண்டுவரப்பட்டதுமான அரசின் கொள்கை முடிவு, மீண்டும் 1 ஜூன் 2001 ஆம் தேதியிடப்பட்ட ஆணை மூலம் கலைக்கப்பட்டு, உடனடியாக அமலுக்கு வரும்படியாக ஆணையிடப்பட்டது. அரசு மீண்டும் 12 ஜூன் 2006 ஆம் தேதியிடப்பட்ட ஆணை மூலம் ம.ந.ப.இன் பணிகளைப் புதுப்பித்து மதிப்பூதியத் தொகையை மாதமொன்றுக்கு ரூ.500/–லிருந்து ரூ.750/– ஆகவும், பயணப்படியாக மாதமொன்றுக்கு ரூ.50/–ஐயும் சேர்த்து உயர்த்தியது, ம.ந.ப.ஆக மீண்டும் நியமிக்கப்பட்டவர்கள் 1 ஜூன் 2001 முதல் 31 மே 2006 வரை பணியில் இல்லாததால் அதற்கு ஊதியம் ஏதும் பெறுவதற்குரியவர்கள் அல்லர் என்பதைத் தெளிவாகப் புரியவைக்கப்பட்டனர்.

7. இக்காலகட்டத்தில், கிராம பஞ்சாயத்தில் பணிபுரிந்துவரும் பஞ்சாயத்து உதவியாளர்களாகவும் பகுதிநேர எழுத்தர்களாகவும் நியமிக்கப்பட்டவர்களை 12 ஜூன் 2006 ஆம் தேதியிடப்பட்ட ஆணையை நிறைவேற்றும்பொருட்டு நியமிக்கவும், அவர்களை 1 செப்டம்பர் 2006 முதல் அமலுக்கு வரும்படி காலமுறை ஊதியத்திற்கு மாற்றவும் ஒரு திட்டத்துடன் துறை, 5 டிசம்பர் 2006 ஆம் தேதியிடப்பட்ட ஆணையிட்டது. அரசு, ஆவண எழுத்தர்/அலுவலக உதவியாளர்/இரவுநேர காவலாள் மற்றும் இணையான பதவி நிலையிலிருந்து எழுகின்ற 50% காலிப்

பணியிடங்களை ம.ந.ப.–லிருந்து நிரப்புவதற்கு ஆய்வுசெய்யும் என்பதைத் தெரிவித்து, துறை, 27 நவம்பர் 2008 ஆம் தேதியிடப்பட்ட அரசாணையை வெளியிட்டது. ம.ந.ப.–ஐ இயன்ற அளவுக்கு நியமனஞ்செய்வதற்கு இருக்கின்ற காலிப் பணியிடங்களின் மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு மாவட்ட ஆட்சியர்கள் பணிக்கப்பட்டனர்.

8. இடைப்பட்ட காலத்தில், தோராயமாக 600 ம.ந.ப., அலுவலக உதவியாளர்களாகவும்/இரவு நேர காவலாட்களாகவும் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பல்வேறு கிராம பஞ்சாயத்துகளில் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பணியில் சேர்த்துக்கொள்ளப்படுவது நிலுவையிலிருக்கையில், 21 மே 2010 ஆம் தேதியிடப்பட்ட ஆணை மூலம் ம.ந.ப. 1 ஜூன் 2010 முதல் 31 மே 2012 வரையில் இரண்டாண்டுகளுக்கு பணியைத் தொடர பணித்தது.

9. அவர்களின் பணிக்காலம் முடிவதற்கு முன், தற்போது ம.ந.ப.ஆல் கவனித்து வரப்படும் பணிகளைக் கவனித்துவர, கிராம அளவிலான பஞ்சாயத்துகளிலுள்ள பஞ்சாயத்து பிரிவுகளில் தேவைக்கதிகமாக பணியாளர்கள் இருப்பதாகவும், ஆகையால், ம.ந.ப. பணியிடத்தைக் கலைக்கவும் முடிவெடுக்கப்பட்டது, இது சுமார் ரூ.73 கோடியை மிச்சப்படுத்தும் என்ற கூற்றின்பேரில் ம.ந.ப.ஐ கலைத்து உடனடியாக அமலுக்கு வரும்படியாக அரசு மீண்டும் 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணையை வெளியிட்டது.

10. திட்டம் கலைக்கப்பட்டதையும், அதன்விளைவாக பணிபுரிந்து வந்த ம.ந.ப. நியமிக்கப்படாததும்/பணி முடிவுறுத்தப்பட்டதையும் தொடர்ந்து, அரசால் பிறப்பிக்கப்பட்ட 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணையை, அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 226 இன் கீழ் உயர்

நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து ம.ந.ப. தங்களின் கூட்டமைப்புகளின் மூலமாக எதிர்த்தனர்.

11. உயர் நீதிமன்ற கற்றறிந்த தனியமர் நீதியரசர், 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணையை நீக்கி, ம.ந.ப.ஆக பணியாற்றிவந்த கூட்டமைப்பு உறுப்பினர்களை மீண்டும் பணியிலமர்த்த தமிழ்நாடு மாநில அரசைப் பணித்து, 23 ஜனவரி 2012 ஆம் தேதியிடப்பட்ட ஒரு பொது உத்தரவு மூலம் நீதிப்பேராணை மனுவை அனுமதித்தார். கற்றறிந்த தனியமர் நீதியரசரின் உத்தரவு நீதிப்பேராணை மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளர்களால் எதிர்க்கப்பட்டபோது, பின்வரும் பணித்தல்களுடன் 19 ஆகஸ்டு 2014 ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது:–

> (i) ம.ந.ப.ஐ பணியமர்த்துவதற்காக, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 47 உடன் தமிழ்நாடு மதுபானக் கடைகள் மற்றும் மதுபானக் கூடங்களில் சில்லறை விற்பனை விதிகள், 2003 இன் விதி 10(5)இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மது குடிப்பதன் தீமைகளைப் பரப்புவதற்கு ம.ந.ப. என்ற பெயரிலோ அல்லது வேறேதேனும் பெயரிலோ பணியிடங்களை உருவாக்குவதைப் பரிசீலிப்பதற்கு மாநில அரசு பணிக்கப்படுகிறது.
>
> (ii) இதனைச் செய்ய இயலவில்லையென்றால், 8.11.2011 ஆம் தேதியிடப்பட்ட அ.ஆ.ப. எண் 86 வெளியிடப்பட்ட நாளன்று ம.ந.ப. பெயர் வரிசைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களை, அவர்களின் சொந்த தாலுக்கா அல்லது வருவாய் மாவட்டத்தில் வயதினைக் கருத்திற்கொள்ளாமல், ஒவ்வொரு விண்ணப்பதாரரின் கல்வித் தகுதிக்கேற்ப, தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமுள்ள மாநில அரசுப் பள்ளிகள், கிராம பஞ்சாயத்துகள், நகர பஞ்சாயத்துகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், கிராம அலுவலகங்கள்,

வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் ஆட்சியர் அலுவலகங்கள் அல்லது வேறேதேனும் அரசு அலுவலகங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் பொறுப்பேற்பு நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள காலிப் பணியிடங்களில் ஏதேனுமொன்றிலோ அல்லது 2014–2015 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக உருவாக்கப்படலாகும் ஏதேனும் பணியிடத்திலோ மாநில அரசு பணியமர்த்தவேண்டும்.

(iii) மேற்படி செயல்பாடு உடனடியாகத் தொடங்கப்பட்டு, 31.10.2014 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ முடிக்கப்பட வேண்டும்.

(iv) மேலே சொல்லப்பட்டவாறு, ம.ந.ப.களில் எவரேனும் ஒருவர் மேற்படி காலத்திற்குள் பணியமர்த்தப்படவில்லை என்றால், அவர்கள் பணியமர்த்தப்பட தகுதியுடையவர்களாக இருப்பின், மாநில அரசு, 1.11.2014 லிருந்து அவர்கள் ஏதேனும் காலி பணியிடத்தில் அல்லது புதிதாக உருவாக்கப்பட்ட பதவியில் பணியமர்த்தப்படும் வரையிலான காலத்திற்கு, அவர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியத்தைச் செலுத்தவேண்டும்.

12. அதே சமயத்தில், 33 ஆம் பத்தியில் பணிக்கப்பட்டவாறு, 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணையைப் பிறப்பித்ததில் மாநில அரசின் செயல்பாடு கெடுநோக்கமுடையது என்று அறிவார்ந்த தனியமர் நீதியரசர் அவர்களால் பதியப்பட்ட காண்முடிவு நியாயமற்றதாகத் தீர்மானிக்கப்படவேண்டும், மேலும் அது, இந்நீதிமன்றத்தில் மேல்முறையீடுகளில் எதிர்க்கப்படும் வழக்குப் பொருளாகும்.

13. வழக்கு பட்டியலிடப்பட்டு, முதல் கேட்பு நாளின்போது, 23 செப்டம்பர் 2014 அன்று அறிவிப்பு அனுப்புகையில், 19 ஆகஸ்டு 2014 ஆம்

தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவின் செயல்பாடு இந்நீதிமன்றத்தால் நிறுத்திவைக்கப்படவேண்டியதானது.

14. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட நிபந்தனைகளின்பேரில் ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு நபரைப் பணியமர்த்தி, மாதாந்திர ஊதியமாக மாதமொன்றுக்கு ரூ.7,500/– வழங்கி, படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்பொருட்டு அல்லது 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்டு அரசால் பிறப்பிக்கப்பட்ட ஆணையைத் தொடர்ந்து இடை நிறுத்தப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளித்து அத்தகைய வேலையில்லாத இளைஞர்களைப் பணியமர்த்திக்கொள்ள, மாநில அரசு 7 ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்ட ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக இந்நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

15. 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணையைத் தொடர்ந்து, இடைநிறுத்தப்பட்ட பெரும்பாலானோரும், மற்றவகையில் தகுதிக்குரிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தவர்களும் 7 ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்ட அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் சேர்ந்துள்ளனர். மொத்தமுள்ள 13,500 ம.ந.ப–இல், பெரும்பாலானோர் சேர்ந்துவிட்டனர், 489 ம.ந.ப.–க்கு இந்நீதிமன்றத்தால் வாய்ப்பளிக்கப்பட்டபோதிலும், அவர்கள் புதிய திட்டத்தைத் தேர்ந்தெடுக்கவில்லை.

16. பணியிடங்களை உருவாக்குவதும், நீக்குவதும் அரசிடமே உள்ளது, மேலும் அது அரசின் கொள்கைசார்ந்த விடயமாகும், அது எப்போதும் உள் நிருவாகத்தின் தேவைக்கும், கவனத்திற்கும்

உரியவகையில் செயலுறுத்தப்படும். ஒரு பணியிடத்தை உருவாக்குவதிலும் அல்லது ஒரு பணியிடத்தை உருவாக்க மறுப்பதிலும் அரசு உண்மையுடன் செயல்பட்டதா? அல்லது அதன் முடிவு (சட்டப்படியாக அல்லது சங்கதியின்படியாக) ஊறு விளைவிக்கிறதா? என்பதை சொற்ப ஆதாரங்களைக் கொண்டு முடிவு செய்வதற்கு நீதிமன்றம் குறைந்தளவு உரிமையுடையதாகும், மேலும், அந்தப் பணியிடத்தை நீக்கும் முடிவைப் பொறுத்தவரையில், அது நல்லெண்ணத்தின்பால் எடுக்கப்பட்டிருந்தால், அதில் நீதிமன்றத்தாலான தலையீடு தேவையில்லை என மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைக்கிறார்.

17. பணியிடத்தை நீக்குவது பணியாற்றியுள்ள தனிநபர் மீதான தனிப்பட்ட தண்டம் அல்ல, அது ஒரு செயலாட்சித்துறையின் முடிவாகும், மேலும் அரசு, அதன் அரசாட்சி சார்ந்த, மக்கள் சார்ந்த அல்லது இறையாண்மை சார்ந்த கடமையை ஆற்றுவதற்கு எதிராக முரண்தடைக் கோட்பாடு பொருந்தாது, ஒரே விதிவிலக்கு என்னவென்றால், அது மோசடி அல்லது வெளிப்படையான அநீதியைத் தடுப்பதற்கு அவசியமானதா? என்பதேயாகும்.

18. மேலும், அரசமைப்பின் வகுமுறைக்கூறு 309–க்குரிய வரம்புரையின் கீழ் வகுக்கப்பட்ட பணி விதிகளால் கட்டுப்படுத்தப்படும், மாநில அரசின் பணியாளர் பணித்துறையின் கீழ், இந்த பணி நியமனங்கள் செய்யப்படவில்லை என்று கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைக்கிறார். கிராம அளவில் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தும்வகையில் அவ்வப்போது திருத்தியமைக்கப்படும் மதிப்பூதியத்தின் அடிப்படையில், ம.ந.ப. ஆக ஊரகப் பகுதிகளிலுள்ள படித்த இளைஞர்களுக்கு

வேலைவாய்ப்பு வழங்கும்பொருட்டே தற்போதைய பணிநியமனங்கள் செய்யப்படுகின்றன.

19. உள்ளூர் பகுதியில் அமைக்கப்பட்ட ஒரு குழு மூலமாக நடத்தப்படும் ஒரு நடைமுறை மூலம் பணிநியமனங்கள் செய்யப்படுவதால் அதிகளவிலான விண்ணப்பதாரர்கள் பணிநியமனம் கோர விரும்புவார்கள் என்றாலும், பணி நியமனம் வழங்குவதற்கு விண்ணப்பதாரர்களின் குறும்பட்டியலிடப்படுவதற்கு ஏதாவது நடைமுறை இருக்கவேண்டும். இவ்வாறாக செய்யப்பட்ட நியமனங்கள், பல்வேறு மாநில அரசு/சார்நிலைப் பணிகளுக்காக வகுத்துரைக்கப்பட்டுள்ள பணிக்கு ஆளெடுப்பு விதிகளின் வரையறைகளின்படி முறையான பணியாளர் பணித்துறைகளின் கீழ் மாநில அரசால் செய்யப்படும் நியமனங்களுடன் எந்தத் தொடர்பும் கொண்டிருக்கவில்லை. ஆதலால், தனிநபர் சார்பாக எந்த உரிமையும் அளிக்கப்பட்டிருக்கவில்லை/அடையப்பெற்றிருக்கவில்லை, அதைத் தவிர, அரசு, முந்தைய நியமனங்களை நிறைவு செய்யும்பொருட்டு, கிராமப்புற படித்த மக்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, திட்டம் முழுவதையும் மறு ஆய்வு செய்துள்ளது, மேலும் அவர்கள், 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணையின்படி இடைநிறுத்தப்பட்டுள்ளதால், அச்சமயத்தில் கிட்டத்தட்ட பத்தாண்டு காலம் ம.ந.ப. ஆக கிராம பஞ்சாயத்தில் பணிபுரிந்து, இடைநிறுத்தப்பட்டிருந்த வேலையில்லாத அந்த இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம், 2005 (இதில் இதற்குப் பிறகு "சட்டம் 2005" எனக் குறிப்பிடப்படும்)இன் கீழ் வகுக்கப்பட்ட மைய அரசு திட்டத்தின் கீழ் மாதமொன்றுக்கு ரூ.7500/– மதிப்பூதியத்தின்பேரில் பணியமர்த்தப்படலாம் எனப் பரிசீலனை செய்து, தற்போதைய அரசு, 7 ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்ட திட்டத்தைக்

கொண்டுவந்தது மற்றும் மாநில அரசு முன்னதாக பணி நியமனம் இடைநிறுத்தப்பட்டவர்களும், அதாவது, 1 டிசம்பர் 2011 முதல் 31 மே 2012 வரையிலான 6 மாதங்கள் காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டதால், மற்றும் தற்போதைய திட்டத்தின் கீழ் மறு வேலைவாய்ப்பு கோருவதில் அக்கறைகாட்டாதவர்களுமான ஒவ்வொரு பணியாளரும் அந்த உரிய காலத்திற்கான 6 மாதகால ஊதியத்தை எப்போது வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம் என மாநில அரசும் அதனை தன்னிச்சையாக ஏற்க முன்வந்தது.

20. அவர்களில் பெரும்பாலானோர் இன்றைய நிலவரப்படி அவர்களது ஊதியங்களைப் பெற்றுக்கொண்டுவிட்டனர், ஆனால், இன்று எதிர்வழக்காடும் குறைந்தளவிலான நபர்கள்தான் பணம் பெற்றுக்கொள்ளவில்லை அல்லது அவர்கள் அரசுக்கு பணத்தைத் திருப்பிச் செலுத்திவிட்டனர் எனக் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைப்பதோடு, அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட 7 ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்ட தற்போதைய திட்டத்தின் கீழ், காலக்கெடு விதித்தும், அதில் இதுவரையிலும் சேராமல் விலகிச் சென்றவர்களுக்கு புதிய நியமனம் ஏதும் வழங்கப்படவில்லை, ஆனால் முன்னதாக இந்நீதிமன்றம், பணியமர்த்தப்படாத நபர்களை இத்திட்டத்தில் சேர்ந்து உறுப்பினராவதற்கு அனுமதியளித்திருந்தது, இருந்தாலும், 7 ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் வரையறைகளின்படி, இதில் சேர விரும்பும் நபர்கள் எப்போது வேண்டுமென்றாலும் சேர்ந்துகொள்ளவும், அதில் சேர விருப்பமில்லாதவர்கள் 1 டிசம்பர் 2011 முதல் 31 மே 2012 வரையிலான 6 மாத காலத்திற்கான ஊதியத்தை இதுவரையிலும் பெறாமல் இருந்தால். அதனை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து

எப்போது வேண்டுமென்றாலும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினையும் அரசு வழங்கிவருகிறது என்றும் பணிந்துரைக்கிறார்.

21. இவ்வாதங்களுக்கு ஆதரவாக, கற்றறிந்த வழக்குரைஞர் *குஜராத் மாநில அரசு மற்றும் பலர் –எதிர்– ஆர்.ஜெ. பதான் மற்றும் பலர்*[1] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் அண்மைய தீர்ப்புரை மீது சார்ந்துநின்றார், இதில் முந்தைய தீர்ப்புரையைக் கருத்திற்கொண்டு, ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்காக தற்காலிகமாக உருவாக்கப்படும் ஒரு பிரிவில், நிருணயிக்கப்பட்ட காலத்திற்கு நிருணயிக்கப்பட்ட ஊதியத்திற்காக செய்யப்படும் நியமனங்கள் முறைப்படுத்துவதற்குரியவையல்ல என்றும், குறிப்பிட்ட திட்டத்திற்காக தற்காலிகமாக உருவாக்கப்படும் ஒரு பிரிவில் நியமிக்கப்பட்ட பணியாளர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்காக/ முறைப்படுத்துவதற்காக உயர் நீதிமன்றத்தால் அத்தகையதொரு உத்தரவு பிறப்பிக்கப்படும் எனில், அது சட்டப்படியானதல்ல என்றும், சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, முறைபடுத்துதலுக்காக உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட அந்த உத்தரவுகளுக்கு இந்நீதிமன்றத்தால் ஆதரவு தெரிவிக்கப்படவில்லை என்றும் தீர்மானித்துள்ளதாக இந்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

22. இதற்கு மாறாக, எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையின் கீழ் உயர் நீதிமன்றத்தால் அடையப்பெற்ற காண்முடிவுக்கு ஆதரவு தெரிவித்து, பணிந்துரைப்பதாவது, அவர்களின் நியமன விதி எப்போதும் அதிகாரத்தில் இருக்கும் தேர்ந்தெடுக்கப்படும் அரசையே சார்ந்திருக்கிறது. ஓர் அரசாங்கம் வேலைவாய்ப்பு அளிக்கும் ஒரு திட்டத்துடன் வருகிறது, அதற்கு அடுத்து வரும் அரசோ, அதற்கு முன் இருந்தவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட

1 2022 (5) எஸ்.சி.சி. 394

கொள்கையை அரசியல் காரணங்களுக்காக மட்டுமே கலைத்துவிடுவதாக தோன்றுகிறது என்பதாகும்.

23. ஒரு திட்டத்தைக் கைவிட அல்லது நீக்க, எப்போதெல்லாம் முடிவு எடுக்கப்படுகிறதோ, அது அரசியல் காரணங்களுக்காக மட்டுமேயன்றி, பதிவிலுள்ள முக்கியமான அல்லது செல்லத்தக்க காரணங்களுக்காக அல்ல என்பதைப் பதிவிலுள்ள இந்த உறுதியான கொள்கையே சுட்டிக்காட்டுகிறது. இக்குறிப்பிட்ட சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை நீக்கறவு செய்த உயர் நீதிமன்றத்தின் முடிவு செல்லத்தக்கது மற்றும் நியாயமானது, மேலும், அரசின் இத்தகைய கேள்விக்குள்ளான செயல்பாடு, உண்மையிலேயே இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறுகள் 14, 16 மற்றும் 21 ஐ மீறியதாகும் மற்றும் கேள்விக்குள்ளான உத்தரவின் கீழ் சரியாகவே உயர் நீதிமன்றத்தால் தலையிடப்பட்டது.

24. மேலும் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைப்பதாவது, இந்த நீதிமன்றத்தின் பல உறுதியான தீர்ப்புரைகளில் பணியாளர்கள் நீதிமன்றத்தின் தலையீடு இன்றி, தேவைக்கேற்ப நீண்ட காலம் தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளனர். தேவைக்கேற்ப நீண்ட காலம் தொடர்ந்து இடைவிடாது பணிபுரிந்து கொண்டிருந்த அத்தகைய பணியாளர்களை முறைப்படுத்துவதற்கு இந்நீதிமன்றம் எப்போதும் முன்வந்துள்ளது, இதனை, *செயலாளர், கர்நாடக மாநில அரசு மற்றும் பலர் –எதிர்– உமாதேவி (3) மற்றும் பலர்*[2] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையிலிருந்து கண்டுகொள்ளலாம், இது பின்னர் இந்நீதிமன்றத்தால் *நிகல் சிங் மற்றும் பலர் –எதிர்– பஞ்சாப் மாநில அரசு மற்றும் பலர்*[3] என்ற

2 2006(4) எஸ்.சி.சி. 1

3 2013 (14) எஸ்.சி.சி. 65

வழக்கில் இந்நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டது, மேற்கொண்டு *மாலதி தாஸ் (ஓய்வு) தற்போது பீ.பி. மகிஷி மற்றும் பலர் –எதிர்– சுரேஷ் மற்றும் பலர்*[4] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தால் மீண்டும் வலியுறுத்தப்பட்டது. இந்நீதிமன்றத் தீர்ப்புரைகளின் துணையுடன், உயர் நீதிமன்றம், இக்குறிப்பிட்ட சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, சரியாகவே 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணையை நீக்கறவு செய்தது, அதனைத் தொடர்ந்து, அரசால் 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணையின்படி கலைக்கப்பட்டுள்ள/இரத்து செய்யப்பட்டுள்ள கொள்கையின் காரணமாக இடைநிறுத்தப்பட்ட அத்தகைய பணியாளர்கள் இதனைத் தொடர்ந்து, ம.ந.ப. என்ற பணியிடத்தில் அல்லது வேறேதேனும் பணியிடம் இருப்பதற்குட்பட்டு முறைப்படுத்தப்படுவதற்குரியவர்கள் எனக் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைக்கிறார். இங்கு எதிர்மேல்முறையீட்டாளர்களான பணியாளர்களுக்கு தகுதியாகவுள்ள எண்ணற்ற பணியிடங்கள் உள்ளன என்பதையும், அவர்கள் எளிதாக உள்ளீர்த்துக் கொள்ளப்படலாம் என்பதையும், ஆதலால், தேவைக்கேற்ப நீண்ட காலம் பணிபுரிந்துள்ளதைக் காத்துக்கொள்ளும்பொருட்டு, அவர்கள் சரியாகவே முறைப்படுத்துதலுக்காக பரிசீலிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் உயர் நீதிமன்றம் அறிந்திருந்தது. முதலாவதாக கற்றறிந்த தனியமர் நீதியரசரால் பதிவு செய்யப்பட்டதும், உயர் நீதிமன்றக் கூட்டமர்வால் சட்டக் கோட்பாடுகளின்பேரில் உறுதிசெய்யப்பட்டதுமான காண்முடிவில் இந்தக் கட்டத்திலாவது, தலையீடு செய்யத் தேவையில்லை.

25. மேலும் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைப்பதாவது, அரசு 2009 ஜூன் மற்றும் 2011 நவம்பர் என்ற இந்த இடைப்பட்ட காலத்தின்போது, எதிர்ப்புக்குள்ளான உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையில்,

4 2014 (13) எஸ்.சி.சி. 249

ம.ந.ப. ஆகப் பணிபுரிந்து வரும் அத்தகைய பணியாளர்கள் ஆவண எழுத்தர்/அலுவலக உதவியாளர்/இரவுநேரக் காவலாள் என்ற முறையான பணியிலோ அல்லது முறையான காலிப் பணியிடங்களில் எழுகின்ற 50%க்கு இணையான வேறேதேனும் பணிகளிலோ உள்ளீர்த்துக் கொள்ளலாம் என்றதொரு திட்டத்துடன் அரசு முன்வந்தது, மேலும், 1 ஜூன் 2009 ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம், ஏறத்தாழ 600 ம.ந.ப. பல்வேறு பணிகளில் உள்ளீர்த்துக் கொள்ளப்பட்டனர், மேலும் இது, அடுத்துவந்த அரசால் 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணை மூலம் இடைநிறுத்தப்பட்டுவிட்டதால்/கலைக்கப்பட்டுவிட்டதால், உள்ளீர்த்துக் கொள்வதற்கான வரிசையில் காத்திருந்த எதிர்மேல்முறையீட்டாளர்கள், நியாயமான பரிசீலனைக்கான தங்களின் சட்டப்படியான உரிமையை இழந்துவிட்டனர், மேலும், 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணையைப் பிறப்பிக்கையில், அரசால் எந்தக் காரணமும் குறித்துரைப்படவில்லை, ஆட்சி மாற்றங்கள் இருந்ததால், அதுவே, நீண்ட காலமாக நடைமுறையில் இருந்துவந்த திட்டத்தைக் கைவிடுவதற்கான காரணமாக இருக்கக்கூடாது.

26. உயர் நீதிமன்றத்தின் கூட்டமர்வு, தேவைக்கேற்ப நீண்ட காலமாகப் பணியாற்றியவர்களும், அரசியல் எதிர்ப்புக் குழுவின் கொள்கையால் இடைநிறுத்தப்பட்டவர்களுமான அத்தகைய பணியாளர்களின் உரிமைகள், உரிமைநலன்கள் பணி நிபந்தனைகள் ஆகியவற்றைப் பாதுகாக்க விழிப்புடன் ஒரு தீர்வுகண்டது. ஆனால், பணியாளர்கள் அதற்கு பலியாட்களாகிவிட்டனர் என்பதே சங்கதியாகும், அதுவே 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான ஆணை பிறப்பிக்கப்பட்டதற்கான காரணமாகத் தெரிகிறது, அவர்கள் ஏறத்தாழ பத்தாண்டு காலமாக தங்களின் உரிமைகளுக்காகப் போராடிவருவதால்

இந்நீதிமன்றமாவது நீதியின் நலன் கருதி வழக்கின் நூதனமான சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி தலையீடு செய்யாதிருக்கலாம்.

27. இதற்கு மாற்றாக, இந்நீதிமன்றம் அவர்களின் வாதத்தைப் பரிசீலிக்க விரும்பவில்லை எனில், இதுவரையிலும் வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி பணியை எடுத்துக்கொள்ள இயலாதவர்களாய் உள்ள பணியாளர்களுக்காவது ஒரு பணியாளருக்கு ரூ.25,851/– என்ற அசல் தொகையை உரியதாகக் கருதப்படலாகும் நியாயமான வட்டித்தொகையுடன் 1 டிசம்பர் 2011 மற்றும் 31 மே 2012 என்ற காலத்திற்கு அவர்களின் 6 மாதகால மதிப்பூதியத்தை ஏற்க அனுமதிக்கப்படலாம் எனக் கற்றறிந்த வழக்குரைஞர் பணிந்துரைக்கிறார்.

28. நாங்கள் தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களைக் கேட்டு பதிவிலுள்ள சான்றாதாரங்களைப் பார்வையிட்டோம்.

29. நாம் முதலில் 2 செப்டம்பர் 1989 ஆம் தேதியிடப்பட்ட ஆணையால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தை ஆராய்ந்தால், கிராம அளவில் அரசின் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி அவற்றை வெற்றிகரமாக முடிப்பதற்கு தொடர் முயற்சி தேவைப்படுவதால் கிராமப் பகுதிகளில் 10 ஆம் வகுப்பு முடித்திருக்கிற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். அத்தகைய திட்டங்களை அரசு அடையாளப்படுத்திய பிறகு, அவற்றை சிறந்த முறையில் செயற்படுத்துவதற்காக வேலையில்லா படித்த இளைஞர்களின் கிராமப்புற பணியாளர் தொகுதியிடம் ஒப்படைக்கலாம். கிராம அளவில் ஆண் ஒருவர் மற்றும் பெண் ஒருவர் என இரண்டு விதமான வேலையாட்கள் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் ஈடுபடுத்தப்பட வேண்டும் என அரசு முடிவு எடுத்தது. அவர்கள் மக்கள் நலப்

பணியாளர்கள் (ம.ந.ப.) என அழைக்கப்பட்டு, முதல்படியாக மாதமொன்றுக்கு ரூ.200/– தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்படுவர்.

30. நியமனம் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதைப் பொறுத்தவரையில், 18 முதல் 30 வயதுக்குட்பட்ட 10 ஆம் வகுப்பு கல்வித் தகுதியுடன் (மலைவாழ் / பழங்குடியினர் பகுதிகளில் பணிபுரிகின்றவர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதி 8 ஆம் வகுப்பாகத் தளர்த்தப்படலாம்) உள்ள அந்த நபர்களின் ஆளெடுப்பு உள்ளூர் பகுதியில் விளம்பரப்படுத்துவன் மூலம் நடைபெறவேண்டும் என்பதும், நியமனத்திற்காக பரிசீலிக்கப்படவேண்டிய தேர்வர்கள் ஒரு குழுவால் ஆராயப்பட்டு, தேர்வு செய்யப்பட வேண்டும் என்பதுமான ஒரு செயல்முறை முன்வைக்கப்பட்டது. 2 செப்டம்பர் 1989 ஆம் தேதியிடப்பட்ட ஆணையின்படி முதல்படியாக முன்வைக்கப்பட்ட செயல்முறை பல்வேறு கடினமான சூழ்நிலைகளைக் கண்டது. படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியிருந்த அதிகாரத்திலுள்ள முந்தைய அரசின் கொள்கை முடிவினை, அரசியலில் ஆட்சி மாற்றம் வருகிறபோதெல்லாம், அடுத்துவரும் அரசியல் கட்சி, எப்போதுமே கலைத்துவிடும்/இரத்து செய்துவிடும் என்பது ஆவணத்திலிருந்து தெரியவருகிறது.

31. கிராமப்புறங்களிலுள்ள படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்காக அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட 2 செப்டம்பர் 1989 ஆம் தேதியிடப்பட்ட திட்டம் அடுத்து வந்த அரசால் 13 ஜூலை 1991 ஆம் தேதியிடப்பட்ட ஆணையின்படி கலைக்கப்படலாயிற்று, இதன் விளைவாக, அந்த வேலையில்லா இளைஞர்களுக்கு அளிக்கப்பட்ட பணி இடைநிறுத்தப்பட்டது என்பதை பதிவாவணங்களிலிருந்து நன்கு

தெரிந்துகொள்ளலாம். அதன்பிறகு உடனடியாக, அடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு 24 பிப்ரவரி 1997 ஆம் தேதியிடப்பட்ட ஆணை மூலம் அதன் கொள்கையை மீட்டளித்து, கிராமச் சொத்துகளையும், நூலகங்களையும் பராமரிப்பதற்கு உதவிபுரிவதற்காகவும், கிராமங்களில் வயதுவந்தோர் கல்வித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகவும், அவர்களின் சமூக நலனுக்காகவும், மேலும், மது ஒழிப்புப் பிரச்சாரத்திற்கு செயலாற்றுவதற்காகவும் கிராம பஞ்சாயத்தில் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்காக படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்தது. கிராம பஞ்சாயத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தில் அந்த இளைஞர்கள் தாங்களாகவே இணைந்துகொண்டு பணியில் இணைத்துக் கொண்டனர், அத்திட்டம் 1 ஜூன் 2001 ஆம் தேதியிடப்பட்ட ஆணையின்படி கலைக்கப்படலாயிற்று. பின்னர் அது மீண்டும் 12 ஜூன் 2006 ஆம் தேதியிடப்பட்ட ஆணையின்படி அறிமுகப்படுத்தப்பட்டு, அவர்களின் மதிப்பூதியம் பிந்தைய கட்டங்களில் உயர்த்தப்பட்டு, அவர்களின் பணிகளும் 21 மே 2010 ஆம் தேதியிடப்பட்ட ஆணையின்படி 1 ஜூன் 2010 முதல் 31 மே 2012 வரையிலான காலத்திற்கு நீட்டிக்கப்பட்டது. ஆனால், இந்த இடைப்பட்ட காலத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதாகத் தெரிகிறது, அதன்பிறகு உடனடியாக 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணையின்படி கொள்கை விலக்கிக்கொள்ளப்பட்டது, இது எதிர்மேல்முறையீட்டாளர்களின் தரப்பில் அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 226 இன் கீழ் உயர் நீதிமன்றத்தில் எதிர்ப்புக்குள்ளான வழக்குப் பொருளாகும்.

32. ஊரகப் பகுதியில் வேலையில்லாதவர்களையும், உபரி தொழிலாளர்களையும் பயனுள்ளவகையில் உள்ளீர்த்துக் கொள்வதே ஊரக வளர்ச்சிக்கான திட்டத்தின் முக்கிய கவனத்திற்குரியதாக இருந்தது

என்பது குறிப்பிடப்பட வேண்டும். கிராமப்புற ஏழை மக்களுக்கு நேரடியாக நிறைவான கூலி வழங்கும் வேலைவாய்ப்பளிக்கும்பொருட்டு, மைய அரசு சிறப்பம்சங்களைக் கொண்ட சட்டம் 2005 என்ற சட்டத்தை முன்கொணர்ந்தது.

(i) திறன்சாரா உடலுழைப்பு வேலை செய்வதற்கு தன்னார்வங்கொண்ட ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த வயதுவந்தோருக்கு குறைந்தபட்சம் நூறு நாட்கள் கூலி வேலைவாய்ப்பு உறுதியளித்து நாட்டின் கிராமப்புறங்களிலுள்ள ஏழைக் குடும்பத்தினருக்கு வாழ்வாதார பாதுகாப்பை உயர்த்துவதே இச்சட்டத்தின் நோக்கமாகும்.

(ii) மாநில அரசு, மைய அரசால் அறிவிக்கப்படலாகின்றவாறு குறிப்பிட்ட காலத்திற்கு மாநிலத்திலுள்ள குறிப்பிட்ட கிராமப்புறங்களிலுள்ள ஒவ்வொரு ஏழைக் குடும்பத்தினருக்கும் சட்டப்படி இயற்றப்பட்ட வகையங்களுக்குட்பட்டு ஒரு நிதியாண்டில் குறைந்தபட்சம் 100 நாள்கள் காலத்திற்கு திறன்சாரா உடலுழைப்பு கூலி வேலைவாய்ப்புக்கு உறுதியளிக்கவேண்டும்.

(iii) ஒவ்வொரு மாநில அரசும் இச்சட்டத்தின் தொடக்க நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் சட்டப்படி முன்மொழியப்பட்ட உறுதியளிப்பினை செயற்படுத்துவதற்கு ஒரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும்.

(iv) இச்சட்டத்தின் கீழ் நூறு நாள்கள் வேலை, இச்சட்டத்தின் நோக்கத்திற்காக மைய அரசால் குறிப்பிடப்படும் கூலி வீதத்தில் வழங்கப்படும். ஒரு பகுதிக்கு குறிப்பிட்ட காலத்திற்கான கூலி வீதம் மைய அரசால் குறிப்பிடப்படும் வரையில், குறைந்தபட்ச கூலிச் சட்டம், 1948 இன் கீழ்

விவசாய கூலிகளுக்காக மாநில அரசால் நிருணயிக்கப்பட்ட குறைந்தபட்ச கூலி வீதம், அப்பகுதிக்கு பொருந்தத்தக்க கூலி வீதமாகக் கருதப்பட வேண்டும்.

(v) தகுதியான நபர் ஒருவருக்கு இச்சட்டத்தின் வகையங்களின்படி நிருணயிக்கப்பட்ட கால வரம்புக்குள் வேலை வழங்காவிட்டால், மாநில அரசு நிருணயிக்கப்பட்ட வீதத்தில் வேலையின்மைப் படியைச் செலுத்துவதற்கு கடமைப்பட்டதாகும்.

(vi) மைய அளவிலான மைய வேலைவாய்ப்பு உறுதிக் குழுவும், இச்சட்டம் பொருந்தத்தக்கதாக உள்ள அனைத்து மாநிலங்களிலுள்ள மாநில அளவிலான மாநில வேலைவாய்ப்பு உறுதிக் குழுவும் அந்தந்த பகுதிகளில் மறு ஆய்வு செய்வதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் மற்றும் சட்டத்தை திறம்பட செயற்படுத்துவதற்காகவும் அமைக்கப்படும்.

(vii) கிராம பஞ்சாயத்து, வட்டார மற்றும் மாவட்ட அளவிலான மாவட்ட பஞ்சாயத்தின் நிலைக்குழு, மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர், திட்ட அலுவலர்கள் மற்றும் கிராம பஞ்சாயத்துகள் ஆகிவற்றுக்கு சட்டத்தின் பல்வேறு வகையங்களைச் செயற்படுத்துகின்ற குறிப்பிட்ட பொறுப்புகளை குறித்தளிக்க வேண்டும்.

(viii) மைய அரசு இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக 'தேசிய வேலைவாய்ப்பு உறுதி நிதியம்' என அழைக்கப்படும் ஒரு நிதியத்தை நிறுவ வேண்டும். அதேபோல், மாநில அரசுகளும் மாநில வேலைவாய்ப்பு உறுதி நிதியங்களை அமைக்கலாம்.

(ix) வெளிப்படையான தன்மை மற்றும் பொறுப்புடைமை, தணிக்கை, குறைகள் மற்றும் அதற்கான தீர்வு முறைகளுக்கான அமைப்பு மற்றும் கீழ்ப்படியாமைக்கான தண்டம் ஆகியவற்றுக்கான வகைமுறைகளும் கருத்திற்கொள்ளப்படுகின்றன.

(x) ஊரக வேலைவாய்ப்பு திட்டத்திற்கான குறைந்தபட்ச அம்சங்கள், ஒரு திட்டத்தின் கீழ் உறுதிப்படுத்தப்பட்ட ஊரக வேலைவாய்ப்பளிப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் கூலியாட்களின் குறைந்தபட்ச உரிமைத்தகுதிகள் ஆகியவற்றுக்கான வகைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

33. இறுதியாக, திறன்சாரா உடலுழைப்பு வேலை செய்வதற்கும், சட்டம், 2005 இன் கீழ் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்கு இடைநிகழ்வாக உள்ள விடயங்களுக்காகவும் தன்னார்வங்கொண்ட ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த வயதுவந்தோருக்கு குறைந்தபட்சம் நூறு நாட்கள் கூலி வேலைவாய்ப்பு உறுதியளித்து நாட்டின் கிராமப்புறங்களிலுள்ள ஏழைக் குடும்பத்தினருக்கு வாழ்வாதாரப் பாதுகாப்பை உயர்த்துவதற்கு வகைசெய்து இச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு மாநிலமும் சட்டம், 2005 உடன் இணைக்கப்பட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது.

34. ஒரு குடும்பத்தின் தலைவரான அந்த விண்ணப்பதாரரோ அல்லது இத்திட்டத்தின் கீழ் வேலைக்காக விண்ணப்பித்துள்ள அதன் மற்ற வயதுவந்தவர்களோ, சட்டம், 2005 இன் பிரிவு 2(n)இன் கீழ் பொருள்வரையறுக்கப்பட்டவாறு, ஒரு திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும் வேலைக்கான விண்ணப்பதாரர்களுக்கு வேலை வழங்கும் நோக்கத்திற்காக, அத்திட்டங்களில் சேருபவர் விண்ணப்பதாரர் எனக் கூறப்படுகிறார். 'திட்டம்' என்ற சொல்லமைப்பு பிரிவு 2(p)இன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது, இது பிரிவு 4 இன் உட்பிரிவு (1)இன் கீழ் மாநில அரசால் அறிவிக்கப்படும் ஒரு திட்டம் எனப் பொருள்படுகிறது.

35. அத்தியாயம் II ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை உறுதியளிப்பதை வகைசெய்கிறது. பிரிவு 3, குடும்ப உறுப்பினர்களுக்கு ஊரக வேலைவாய்ப்பினை உறுதி செய்வதைக் குறித்து குறிப்பிடுகிறது, மாநில அரசு ஒரு நிதியாண்டில் திறன்சாரா உடலுழைப்பு வேலை செய்வதற்கு தன்னார்வமுள்ள ஒவ்வொரு குடும்பத்தின் வயதுவந்தோருக்கும் நூறு நாட்களுக்கு குறையாமல் வேலை வழங்கவேண்டும். மேலும், இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் வேலையைச் செய்யும் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நாள் வேலைக்கான கூலி வீதத்தில், வாரந்திர அடிப்படையில் அல்லது அந்த வேலை செய்த நாளுக்குப் பிறகு இரண்டு வார காலத்திற்கு மேற்செல்லாத எந்நேர்விலும் கூலி பெறுவதற்குரியவர்கள் என்றும் அது வகைசெய்கிறது.

36. அத்தியாயம் III, வேலைவாய்ப்பு உறுதித் திட்டங்களையும் வேலையின்மைப் படியையும் குறிப்பிடுகிறது.

37. பிரிவு 3 இன் வகையங்களுக்கு செயல்விளைவு கொடுக்கும் நோக்கங்களுக்காக, ஒவ்வொரு மாநிலமும், இத்திட்டத்தின் கீழ் அடங்கியுள்ள ஊரகப் பகுதிகளிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் மற்றும் திறன்சாரா உடலுழைப்பு வேலை செய்வதற்கு விண்ணப்பிக்கும் தன்னார்வமுள்ள வயதுவந்தோருக்கும் ஒரு நிதியாண்டில் நூறு நாட்களுக்கு குறையாத வேலைவாய்ப்புக்கு உறுதியளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி ஓர் அறிவிக்கை வெளியிடவேண்டும் எனப் பிரிவு 4 வகைசெய்கிறது.

38. வேலைவாய்ப்பு அளிப்பதற்காக என்ன நிபந்தனைகள் உள்ளன என்பது குறித்து சட்டம், 2005 இன் பிரிவு 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. கூலி வீதம், பிரிவு 6 இன்படி அவ்வப்போது மைய அரசால் நிருணயிக்கப்பட வேண்டும். திட்டத்தின் கீழான ஒரு வேலைவாய்ப்புக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் ஒருவருக்கு, வேலை கோரி விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தைப் பெற்ற நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் அந்த வேலைவாய்ப்பினை வழங்காவிடில், அவர் பிரிவு 7 இன்படி வேலையின்மை தினப்படியைப் பெறுவதற்குரியவராவார்.

39. சட்டம் 2005 இன் பிரிவுகள் 10 மற்றும் 12 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மைய அளவிலான மைய வேலைவாய்ப்பு உறுதிக் குழுவாலும், மாநில அளவிலான மாநில வேலைவாய்ப்பு உறுதிக் குழுவாலும் செயற்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவதைக் குறித்து அத்தியாயம் IV குறிப்பிடுகிறது.

40. சட்டம் 2005 நடைமுறைக்கு வந்த பிறகு, சட்டம் 2005 இன் பிரிவு 1(3)இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த மாநிலங்களில் தமிழ்நாடு மாநிலமும் சேர்க்கப்பட்டுள்ளது, அது சட்டம் 2005 இன் கீழ் முதன்மையாக வேலையில்லா படித்த இளைஞர்களுக்காக அளிக்கப்பட்டது.

41. சட்டம் 2005 இன் கீழ் தமிழ்நாடு மாநில அரசால் நிறைவேற்றப்பட்ட திட்டம் இன்னமும் நடைமுறையிலுள்ளது என்பது மறுக்கப்பட்டிருக்கவில்லை.

42. கடந்த காலத்தில் அரசால் பின்பற்றப்பட்டு வந்த நடைமுறையைக் குறித்து, 1989 முதற்கொண்டு விரிவான குறிப்புரையாகக் கொடுக்கப்பட்டுள்ளது, மிகக் குறிப்பாகக் கூறினால், கிராம பஞ்சாயத்தில் வேலை செய்ய படித்த வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டத்தை 2 செப்டம்பர் 1989 ஆம் தேதியிடப்பட்ட ஆணையின்படி அறிமுகப்படுத்திய பிறகு, அது பல்வேறு கட்டங்களில் பல்வேறு விதமாக மாற்றங்கண்டுள்ளது.

43. அரசியல் கட்சிகள் மாநில ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி தங்களின் அரசியல் எதிரிகளின் அறிவைப் புறந்தள்ள அனுமதிப்பதன் மூலம் நமது நாட்டின் குடியாட்சியை இழக்க நாம் வாய்ப்பளிக்கக் கூடாது.

44. இத்திட்டத்தின் பின்புலத்திலுள்ள நோக்கத்தைப் பொறுத்தவரையில், திறன்சாரா உடலுழைப்பு வேலை செய்ய தன்னார்வமுள்ளவர்களுக்கு ஒரு நிதியாண்டில் குறைந்தபட்சம் நூறு நாட்களுக்கு குறையாமல் வேலைவாய்ப்பினை உறுதிசெய்து, அவ்வப்போது அரசால் உறுதியளிக்கப்படும் கூலிக்கு வேலைசெய்ய படித்த வேலையில்லா ஏழை இளைஞர்களின் நலன் கருதி மாநில அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பளிப்பது மிகவும்

பாராட்டுக்குரியதாகும். அதே சமயத்தில் அரசின் கொள்கை முடிவு, அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 14 இன்படி எப்போதும் நீதிமுறை மறு ஆய்வுக்குட்பட்டது என்றாலும், அதில், சட்டப்படியாகவோ சங்கதியின்படியாகவோ அரசின் கெடுநோக்கம் இருந்தாலன்றி, சாதாரணமாக அதில் தலையிட வேண்டியதில்லை, இருந்தாலும் தற்போதைய வழக்கில், 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணை பிறப்பித்ததில் கெடுநோக்கமிருந்தது எனக் கற்றறிந்த தனியமர் நீதியரசர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட காண்முடிவைப் பொறுத்தவரையில், அதனை உயர் நீதிமன்ற கூட்டமர்வு நீக்கறவு செய்துள்ளது. ஆவணங்களை ஆராய்ந்ததில், 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணை, அரசின் ஒரு கொள்கை முடிவாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கக்கூடும் என்றாலும், குறைந்தபட்சம் வரிசைமுறைப்படியான பதிவாவணச் சங்கதிகளுங்கூட இந்நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்படவில்லை என நாங்கள் கருதுகிறோம்.

45. 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணை சட்டத்தின் கண்ணோட்டத்தில் நிலைக்கத்தகாததா?, இடைநிறுத்தப்பட்ட அந்தப் பணியாளர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்கும், பணி முறைப்படுத்தலுக்கும் தகுதியானவர்களா? என்பது நமது பரிசீலனைக்கு எழுகின்ற வினாவாகும்.

46. அறிவார்ந்த் தனியமர் நீதியரசர் அவர்களும், கூட்டமர்வும் தங்களது எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரைகளில், 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணையைப் பிறப்பித்து இடைநிறுத்தப்பட்ட அந்தப்

பணியாளர்கள், மீண்டும் பணியமர்த்தப்படுவதற்கு உரியவர்கள் மட்டுமின்றி, பணியிடத்தை உருவாக்கிய பிறகு பணியில் முறைப்படுத்தப்படுவதற்கு உரியவர்கள் என்ற காண்முடிவுடன் இணங்கினர். எங்களுடைய கருத்துப்படி, உயர் நீதிமன்ற கூட்டமர்வால் என்ன கருத்துரைக்கப்பட்டுள்ளதோ, அது சட்டப்படி நிலைநிறுத்தத்தக்கதல்ல.

47. நீதிமன்றங்கள், பணியிடங்களை உருவாக்க உத்தரவிட முடியாது என்ற முன்மொழிவுரையுடன் மாறுபாடு இல்லை. *டிவிஷனல் மேனேஜர் ஆரவல்லி கோல்ப் கிளப் மற்றும் ஒருவர் –எதிர்– சந்தர் ஹாஸ் மற்றும் ஒருவர்*[5] என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாவது:–

> "15. நீதிமன்றம், பணியிடங்களை உருவாக்குவதற்கு பணிக்க முடியாது. பணியிடங்களை உருவாக்குவதும் ஒப்புதலளிப்பதும் செயலாட்சி அல்லது சட்டம் இயற்றும் அதிகார அமைப்புகளின் தனிச்சிறப்புரிமை ஆகும், மேலும் நீதிமன்றம், இந்த முற்றிலும் செயலாட்சி அல்லது சட்டம் இயற்றும் கடமைப்பணிக்கான உரிமையைத் தானே எடுத்துக்கொண்டு, எந்த அமைப்பிலும் பணியிடங்களை உருவாக்குவதற்கு பணிக்க முடியாது. பணியிடத்தை உருவாக்குதல் என்பது செயலாட்சி அல்லது சட்டம் இயற்றும் கடமைப்பணியாகும் என்றும், இதில் பொருளாதாரக் காரணிகள் அடங்கியிருக்கிறது என்றும் இந்நீதிமன்றம் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளது. ஆகவே, டிராக்டர் ஓட்டுநர் பணியிடங்களை உருவாக்கி, மேற்படி பணியிடங்களில் எதிர்மேல்முறையீட்டாளர்களின் பணிகளை

5 2008(1) எஸ்.சி.சி. 683

முறைப்படுத்த உயர் நீதிமன்றத்தாலும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தாலும் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் நிலைநிறுத்தப்பட முடியாது, மேலும் அவை, இதன்படி நீக்கறவு செய்யப்படுகின்றன."

48. பின்னர், *மகாராஷ்டிர மாநில ரோட் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் மற்றும் ஒருவர் –எதிர்– காஸ்டரைப் ராஜ்ய பரிவாகன் கர்மாச்சாரி சங்காதனா*[6] என்ற வழக்கில் இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது:–

"**41**.. ஆதலால், பணியிடங்களை உருவாக்குதல் என்பது நீதிசார் கடமைப்பணிகளுக்கு உட்பட்டதல்ல, இது தெளிவாகவே செயலாட்சி தொடர்புடையதாகும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய பணியிடங்கள் இல்லாதவிடத்து நீதிமன்றத்தால் அதற்கு நிரந்தரத் தகுதியை வழங்கிவிட முடியாது என்பதும், பணியிடங்களை உருவாக்குதல் தொடர்பான செயலாட்சிக் கடமைப்பணிகளையும் அதிகாரங்களையும் நீதிமன்றங்களால் தாமே எடுத்துக்கொள்ளப்பட முடியாது என்பதும் உண்மை."

49. எதிர்மேல்முறையீட்டாளர்கள், அரசு வேலையிலோ அல்லது குடிமைப் பணியிலோ இருப்பவர்கள் அல்லர், மேலும், அவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 309 க்கான வரம்புரையின் கீழ் இயற்றப்பட்டுள்ள சட்ட விதிகளால் கட்டுப்படுத்தப்படுகின்ற/ முறைப்படுத்தப்படுகின்ற பணி நிபந்தனைகளைக் கொண்ட அரசுப் பணியாளர் பணித்துறை எதிலும் உள்ள பணியிடத்திலும் நியமனம் செய்யப்படவில்லை.

---

6 2009(8) எஸ்.சி.சி. 556

50. உள்ளபடியாக, எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஒரு திட்டத்தின் பணியில் ஈடுபட்டுவந்தனர், அதற்கான மதிப்பூதியமும் செலுத்தப்பட்டு வந்தது, மேலும், சட்டம் 2005 இன் கட்டளைப்படி தமிழ்நாடு மாநிலத்தில் திட்டம் தொடர்ந்திருக்கும் வரையில், அவர்கள் பணியில் தக்கவைத்துக் கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவர்கள் என அறியப்பட்டாலன்றி அல்லது பணிமூப்பு ஓய்வு வயதை அடைந்துவிட்டாலன்றி, சட்டம் 2005 இன் நோக்கத்தை நிறைவேற்றுவதில் அரசால் நிறைவேற்றப்பட்ட உரிய திட்டங்களின் கீழ் பணிபுரிந்துவரும் அந்த நபர்களை இடைநிறுத்துவதற்கான காரணங்கள் எதுவுமில்லை என்பதை நாங்களும் நியாயமெனக் காண்கிறோம்.

51. ஆனால், 8 நவம்பர் 2011 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணை நிலைநிறுத்தத்தக்கதல்ல என உத்தரவிடப்பட்டால், எதிர்மேல்முறையீட்டாளர்களும், இவர்களைப்போன்று நியமனம் செய்யப்பட்ட மற்றவர்களும் 8 நவம்பர் 2011 ஆம் தேதியிடப்பட்ட ஆணை பிறப்பிப்பதற்கு முன்பாக பணியமர்த்தப்பட்டது போன்று, அதே வரையறைகளின் அடிப்படையில் அவர்களை மீண்டும் பணியமர்த்திக் கொள்ளப்படமுடியும் என்ற காரணத்தால், ஏற்கெனவே கருத்துரைக்கப்பட்டவாறு, அந்தப் பணியாளர்கள் மீண்டும் பணியமர்த்தப்படுவதற்கும் பணி முறைப்படுத்துதலுக்கும் தகுதியானவர்கள் அல்லர் என்பதாகும். அதாவது, அவர்களின் பணியமர்த்தம் 1 ஜூன் 2010 முதல் 31 மே 2012 வரையில் அமலில் இருக்குமாறு 21 மே 2010 ஆம் தேதியிடப்பட்ட ஆணை மூலம் இரண்டாண்டு காலம் நீட்டிக்கப்பட்டுள்ளதால், அந்த நபர்கள் 31 மே 2012 வரையில் மட்டுமே பணியைத் தொடர அனுமதிக்கப்பட்டிருக்க முடியும். மேற்கொண்டு நீட்டிப்பு ஏதும் வழங்கப்படாத நிலையில் இத்திட்டத்தின் கீழ் இதற்குப்பிறகு

மேற்கொண்டு பணியில் தொடருவதற்கு, பணியமர்த்தப்பட்ட நபரில் எவருக்கும் சாதகமான உரிமை ஏதும் அளிக்கப்படவில்லை.

52. அவர்களை மீண்டும் பணியமர்த்திக்கொள்ளவும், முறைப்படுத்துவதற்கும் மாநில அரசுக்கு வழங்கப்பட்டிருக்கும் எதிர்ப்புக்குள்ளான கட்டளையைப் பொறுத்தவரையில், எங்களுடைய ஆழ்ந்தாராய்ந்த கருத்துப்படி, அது முற்றிலும் தவறானது மற்றும் அது சட்டப்படி நிலைநிறுத்தத்தக்கதல்ல என்பதாகும்.

53. (மேற்கண்ட) *செயலாளர், கர்நாடக மாநில அரசு மற்றம் பலர் – எதிர்– உமாதேவி (3) மற்றும் பலர்* என்ற வழக்கில் இந்நீதிமன்றத் தீர்ப்புரை சார்வுறப்பட்டு, அவ்வாறான பணியாளர்கள் அரசுப் பணியாளர் பணித்துறையில் சட்டவிரோதமாக/முறைகேடாக நியமிக்கப்பட்டு, அவர்களின் பணி நிபந்தனைகள், வகுக்கப்பட்ட சட்ட விதிகளின் கீழ் அடங்கியிருந்தாலும், அவர்கள் அவரவருக்குரிய விதிகளின் கீழ் வகைசெய்யப்பட்டுள்ளவாறான தெரிவு நடைமுறையின்படி ஆய்வு செய்யப்படாமல், கிட்டதட்ட பத்தாண்டுகளுக்கும் மேலாக தற்காலிக அடிப்படையில் தொடர்ந்து பணி செய்து வர அனுமதிக்கப்பட்டனர் என்பதைக் குறித்ததாகும். இந்நீதிமன்றம் அத்தகைய நடைமுறையை விரும்பவில்லை என்றாலும் ஒருமுறை நடவடிக்கையாக, தீர்ப்புரையின் 53 ஆவது பத்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நீதிமன்றத்தின் தலையீடின்றி அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்ட பணியில் பணிபுரிந்து வருகின்ற அந்தப் பணியாளர்களை முறைப்படுத்த அரசுக்கு அனுமதியளித்தது. அது இதன்கீழ் எடுத்தாளப்பட்டுள்ளதாவது:–

> "53. ஓர் அம்சம் தெளிவாக்கப்பட வேண்டியதாகிறது. எஸ்.வி. நாராயணப்பா [(1967) 1 எஸ்.சி.ஆர். 128], ஆர்.என்.

நஞ்சுண்டப்பா [(1972) 1 எஸ்.சி.சி. 409] மற்றும் பி.என். நாகராஜன் [(1979) 4 எஸ்.சி.சி. 507] ஆகிய வழக்குகளில் விளக்கப்பட்டு, மேற்படி 15 ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்டவாறு, உரிய தகுதியுடைய நபர்கள் உரிய ஒப்புதலளிக்கப்பட்ட காலிப் பணியிடங்களில் முறையற்ற முறையில் நியமனங்கள் (சட்டவிரோதமான நியமனங்கள் அல்ல) செய்யப்பட்டு, அப்பணியாளர்கள், நீதிமன்ற அல்லது தீர்ப்பாய உத்தரவுகளின் வாயிலான தலையீடின்றி பத்தாண்டுகள் அல்லது அதற்கும் மேலாக தொடர்ந்து பணிபுரிந்து வந்துள்ளனர் என்பதான நேர்வுகளும் உள்ளன. அத்தகைய பணியாளர்களின் பணிகளை முறைப்படுத்துதல் என்ற பிரச்சினை மேற்குறிப்பிடப்பட்ட வழக்குகளில் இந்த நீதிமன்றத்தால் அறுதியிடப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையிலும், இத்தீர்ப்புரையின் அடிப்படையிலும் தகுதிப்பண்புகளின்பேரில் பரிசீலிக்கப்பட வேண்டியதாக இருக்கலாம். அத்தறுவாயில், இந்திய ஒன்றிய அரசு, மாநில அரசுகள் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் ஆகியவை, உரிய ஒப்புதலளிக்கப்பட்ட பணியிடங்களில் நீதிமன்றங்களின் அல்லது தீர்ப்பாயங்களின் உத்தரவுகள் என்ற போர்வையின் கீழ் அல்லாமல் பத்தாண்டுகள் அல்லது அதற்கும் மேலாக பணிபுரிந்து வந்தவர்களான அத்தகைய முறையற்ற முறையில் நியமிக்கப்பட்டவர்களின் பணிகளை முறைப்படுத்த ஒருமுறை நடவடிக்கையாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும், மேலும், தற்காலிக பணியாளர்கள் அல்லது தினக் கூலிகள் தற்போது பணியமர்த்தப்பட்டு வருகின்ற நேர்வுகளில், நிரப்பப்பட

வேண்டிய ஒப்புதலளிக்கப்பட்ட அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்ப முறையான ஆளெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் செயல்முறை இந்த நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஏற்கெனவே முறைப்படுத்துதல் ஏதும் செய்யப்பட்டிருந்து, அது நீதிய விவாதத்தில் இல்லாவிட்டால் அதனை இத்தீர்ப்புரையின் அடிப்படையில் மீண்டும் செய்யத் தேவையில்லை, ஆனால், அரசமைப்புச்சார்ந்த தேவைப்பாட்டை மேற்கொண்டு புறக்கணிப்பதோ, அரசமைப்புச் சட்ட வகையத்தின்படி உரியமுறையில் நியமிக்கப்படாதவர்களை முறைப்படுத்துவதோ அல்லது நிரந்தரமாக்குவதோ கூடாது என்பதை நாங்கள் தெளிவாக்குகிறோம்."

54. அதே சமயத்தில், ஒப்புதலளிக்கப்பட்ட பணியிடம் இல்லாவிட்டால், அப்பணியிடத்தை உருவாக்கவும், மாநில அரசில் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்ற நபர்களை உள்ளீர்த்துக் கொள்ளவும் மாநில அரசை வற்புறுத்த முடியாது.

55. (மேற்கண்ட) *நிகல் சிங் மற்றும் பலர்* என்ற வழக்கின் மீது அதிகமாகச் சார்வுறப்பட்டது, இது, மாநில அரசால், காவல் சட்டம், 1861, பிரிவு 17 இன் கீழ் நியமனங்கள் செய்யப்பட்டதொரு வழக்காகும். அவர்களுடைய நியமனங்கள், சட்டம், 1861 இன்படி செய்யப்பட்டு, தேவைக்கேற்ப அவற்றை நீண்ட காலம் தொடரவும் அனுமதிக்கப்பட்டது, இது சட்டவிரோதமானதாகவோ அல்லது முறையற்றதாகவோ கருதப்படவில்லை என்பதால், அவர்கள் அத்தகையதொரு நீண்ட காலம் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளதால், அவர்கள் பணி முறைப்படுத்தலுக்கு

உரியவர்கள் எனக் கருத்துரைப்பது தக்கதென இந்நீதிமன்றம் கருதியது. தற்போதைய வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளர்கள் அரசுப் பணியாளர் பணித்துறையில் ஒரு முறையான ஒப்புதலளிக்கப்பட்ட பணியிடத்திற்கு ஒருபோதும் நியமனம் செய்யப்படவில்லை,, அப்படி இல்லாதநிலையில், இத்தீர்ப்புரை உதவிகரமாக இல்லை எனலாம்.

56. *(மேற்கண்ட) மாலதி தாஸ் (ஓய்வு) தற்போது பீ.பி. மகிஷி* என்ற பிந்தைய தீர்ப்புரை சார்வுறப்பட்டுள்ளது, இது, உண்மையில் அரசுப் பணியாளர் பணித்துறைகளிலுள்ள வெவ்வேறு துறைகளில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்துவரும் பணியாளர்கள் குறித்த வழக்காகும். ஒரு கட்டத்தில் பணியாளர்கள் பணியை முறைப்படுத்தக் கோரி உயர் நீதிமன்றத்தை அணுகினர், கர்நாடக உயர் நீதிமன்றம் அவர்களின் உதவிக்கு வந்து, அரசுத் துறைகளில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் அந்த பணியாளர்களின் பணியை முறைப்படுத்த மாநில அரசுக்கு உத்தரவிட்டு, இறுதியாக சி.அ.ம. இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பிறகு, அவமதிப்பு மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன, இரண்டு கட்டங்களாக அதாவது, முதல் மற்றும் இரண்டாவது கட்டமாக சம்பந்தப்பட்ட அப்பணியாளர்களால் அவமதிப்பு மனு தாக்கல் செய்தவகையில் பணியாளர்கள் முறைப்படுத்தப்பட்டனர். அப்பணியாளர்களில் சிலர் அவமதிப்பு மனு தாக்கல் செய்தனர், இது மூன்றாவது கட்டமாகத் தெரிகிறது, (மேற்கண்ட) *செயலாளர், கர்நாடக மாநில அரசு மற்றும் பலர் –எதிர்– உமாதேவி (3) மற்றும் பலர்* என்ற வழக்கில் இந்த நீதிமன்றத் தீர்ப்பின் முன்னுரையின்பேரில் சிறப்பு அனுமதி மனுவின் தள்ளுபடியின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் உயர் நீதிமன்றத்தின் உத்தரவு உறுதி செய்யப்பட்டிருப்பினும், அவர்கள் முறைப்படுத்தலுக்காக பரிசீலிக்கப்படவில்லை. உயர் நீதிமன்றத்தின்

தீர்ப்புரை உறுதிசெய்யப்பட்டு, இரண்டு கட்டமாக அவமதிப்பு மனுக்கள் தாக்கல் செய்ததன்பேரில் பணியாளர்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதால், உயர் நீதிமன்றத் தீர்ப்புரையால் கட்டுப்படுத்தப்படும் எஞ்சிய பணியாளர்களின் கோரிக்கையிலிருந்து விலகிச் செல்வதற்கான காரணம் ஏதும் இருப்பதாகக் தெரியவில்லை. மேலும் இதற்கு (மேற்கண்ட) *செயலாளர், கர்நாடக மாநில அரசு மற்றும் பலர் –எதிர்– உமாதேவி (3) மற்றும் பலர்* என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை வழங்கிய பிறகு, இந்த வழக்குப் பொருளின் அடிப்படையில் சட்டத்தில் மாற்றம் ஏற்பட்டதும், மேலும் இது, தற்போதைய வழக்கின் சங்கதிசார்ந்த கருப்பொருளும் அல்ல.

57. பணியிடங்களை உருவாக்கி, எதிர்மேல்முறையீட்டாளர்களின் தகுதியின் அடிப்படையில் அவர்களை உள்ளீர்த்துக்கொண்டு மீண்டும் பணியிலமர்த்தும் உயர் நீதிமன்றத்தின் கட்டளை சட்டப்படி நிலைநிறுத்தத்தக்கதல்ல என்பதும், அது முற்றிலும் தள்ளுபடி செய்யப்படுவதற்குரியதாகும் என்பதும் எங்களின் ஆழ்ந்தாராய்ந்த கருத்தாகும்.

58. இந்நீதிமன்றம், (மேற்கண்ட) *குஜராத் மாநில அரசு மற்றும் பலர்* என்ற வழக்கின் அண்மையத் தீப்புரையில் 10 மற்றும் 11 ஆவது பத்திகளில் எங்களால் தெரிவிக்கப்பட்ட கருத்து பரிசீலிக்கப்பட்டுள்ளது, அது பின்வருமாறு:–

> "10. எதிர்மேல்முறையீட்டாளர்கள் முதலில் பதினொன்று மாத காலத்திற்கு நிருணயிக்கப்பட்ட ஊதியத்தில் அதுவும் நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, மறுவாழ்வு நோக்கத்திற்காக மட்டும் உருவாக்கப்பட்ட "நிலநடுக்கத்திற்கு பின்பான மறுமேம்பாட்டுத் திட்டத்திற்காக" "திட்டம் நிறைவேற்றுதல்

பிரிவு" என்ற தற்காலிக பிரிவில் நியமிக்கப்பட்டனர் என்ற சங்கதியை நீதியர் அமர்வு மதிப்பீடு செய்யவில்லை மற்றும்/அல்லது சங்கதியைப் பரிசீலிக்கவில்லை. ஆகவே, எதிர்மேல்முறையீட்டாளர்கள் நியமிக்கப்பட்ட பிரிவு தற்காலிகமான பிரிவே அன்றி முறையான பணியாளர் பணித்துறையல்ல. எதிர்மேல்முறையீட்டாளர்கள் நியமனம் செய்யப்பட்டதும், பணிபுரிந்து வந்ததுமான பணியிடங்கள் அரசின் எந்த முறையான பணியாளர் பணித்துறையிலும் ஒப்புதலளிக்கப்பட்ட பணியிடங்கள் அல்ல.

11. ஆகவே, எதிர்மேல்முறையீட்டாளர்கள், ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு தற்காலிக பிரிவில் நிருணயிக்கப்பட்ட காலத்திற்கு நிருணயிக்கப்பட்ட ஊதியத்தில் நியமிக்கப்பட்டுள்ளபோது, அரசுப் பணியில் அவர்களை உள்ளீர்த்துக்கொண்டு, அவர்களின் பணிகளை முறைப்படுத்துவதற்கு உயர் நீதிமன்றக் கூட்டமர்வால் அத்தகைய கட்டளை பிறப்பித்திருக்கப்படக்கூடாது. எதிர்மேல்முறையீட்டாளர்களின் பணிகளை முறைப்படுத்தி மற்றும்/அல்லது உள்ளீர்த்துக்கொள்கையிலுங்கூட, மாநில அரசு மேலதிக பணியிடங்களை உருவாக்கலாம் என உயர் நீதிமன்றம் கருத்துரைத்துள்ளது. மேலதிக பணியிடங்களை உருவாக்குவதற்கான அத்தகையதொரு கட்டளை நிலைநிறுத்தத்தக்கதல்ல. அத்தகையதொரு கட்டளை முற்றிலும் அதிகாரவரம்பற்றதாகும். ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட தற்காலிக பிரிவு ஒன்றில் நியமிக்கப்பட்ட பணியாளர்களை அதுவும் மேலதிக

பணியிடங்களை உருவாக்கி உள்ளீர்த்துக்கொள்வதற்காக/ முறைப்படுத்துவதற்காக உயர் நீதிமன்றத்தால் அத்தகையதொரு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கக்கூடாது."

59. மாநில அரசால் அதன் 7 ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்ட தற்போதைய கொள்கையின் கீழ் மீண்டும் பணியமர்த்தப்பட்டிருக்காத அந்த நபர்கள் 1 டிசம்பர் 2011 லிருந்து 31 மே 2012 வரையிலான காலத்திற்கு தங்களின் மதிப்பூதியத்தைப் பெறுவதற்குரியவர்களாவர் என்ற விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது, அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட 7 ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்ட திட்டத்தைத் தொடர்ந்து அதில் சேராத அந்தப் பணியாளர்கள் தங்களின் 6 மாத காலத்திற்கான மதிப்பூதியத்தை எப்போது வேண்டுமென்றாலும் ஏற்றுக்கொள்வதற்கு உரிமையுடையவராவர் என்றாலும், முன்னதாக அரசு அவர்களுக்கு ஏற்கெனவே மதிப்பூதியம் வழங்கியுள்ளதால் அவர்கள் மேற்படி அசல் தொகைக்கு வட்டி ஏதும் பெறுவதற்குரியவர்களல்லர் என்பதை நாங்கள் தெளிவாக்குகிறோம். ம.ந.ப.இன் மதிப்பூதியத்தின்படியாக அச்சமயத்தில் நிருணயிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.25,851/– (1 டிசம்பர் 2011 முதல் 31 மே 2012 வரை) என்பதாகும். விண்ணப்பம் ஒன்று தாக்கல் செய்யப்படுகிறதென்றால், மாநில அரசு தனிநபரின் வங்கிக் கணக்கிலாவது பணத்தைச் செலுத்தலாம்.

60. சட்டம், 2005 இன் நோக்கத்தை நிறைவேற்றும்வகையில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட 7 ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்ட திட்டத்திற்கிணங்க அதில் சேர்ந்துள்ள அந்த நபர்கள் திட்டத்துடன் ஒருங்கிணைந்திருப்பதோடு, அத்திட்டம் நடைமுறையிலுள்ளவரையில் அதில் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்பட வேண்டும். அதே சமயத்தில், 7

ஜூன் 2022 ஆம் தேதியிடப்பட்ட திட்டத்திற்கிணங்க அதில் சேராத அந்த நபர்கள், இடைப்பட்ட காலமான 1 டிசம்பர் 2011 முதல் 31 மே 2012 வரையிலான 6 மாத காலத்திற்கான தங்களின் பணக்கொடுப்புகள் ம.ந.ப.க்கு அசல் தொகையாக வழங்கப்படும் ரூ.25,851/–ஐ ஏற்பதற்கு உரிமையானவர்களாவர். அத்தகைய விண்ணப்பம் தாக்கல் செய்யப்படுவதன்பேரில், மேல்முறையீட்டாளர்கள் மூன்று மாதங்களுக்குள் அவற்றை உரியமுறையில் சரிபார்த்தபின், ஆர்.டி.ஜி.எஸ். மூலமாக அல்லது வேறேதேனும் முறையில் அந்த ம.ந.ப.க்கு பணத்தை அனுப்பிக்கொடுக்க வேண்டும்.

61. எங்களுடைய ஆழ்ந்தாராய்ந்த கருத்தின்படி, மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக உயர் நீதிமன்றக் கூட்டமர்வால் வழங்கப்பட்ட தீர்ப்புரை நிலைநிறுத்தத்தக்கதல்ல மற்றும் அது நீக்கறவு செய்யப்படுவதற்குரியதாகும்.

62. இதன் விளைவாக, மேல்முறையீடுகள் வெற்றியடைவதால் அனுமதிக்கப்படுகின்றன. இதன்படி 19 ஆகஸ்டு 2014 ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மேற்கூறப்பட்ட கருத்துரையுடன் நீக்கறவு செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

63. விண்ணப்பம்(ங்கள்) ஏதும் நிலுவையிலிருப்பின், அவை தீர்வு செய்யப்பட வேண்டும்.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."